<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No.46/2020**

Deposition of P**.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 14.08.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சிவகாமி Husband's Name : ராமு

துவக்க நேரம்: 1.01 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

4. கடந்த 20.08.1984 தேதியிட்ட கிரையாவணத்தின் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அசல் ஆவணம் கடன் பெற்றதற்காக கொடுக்கப்பட்டுள்ளதால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணத்தின் அசல் ஆவணம் தற்போது யாரிடம் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் வேண்டுமென்றே அசல் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் கிரயம் வாங்கிய பின்னிட்டு தான் சர்வே எண் 41/10 என்பது 41/10A , 41/10B என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

சர்வே எண் 41/10A யில் எங்கள் இடத்தில் கிழப்புறத்தில் சந்து விடாமல் வீடு கட்டி உள்ளோம் என்றால் சரியல்ல கிழபுரத்தில் மூன்றடி இடம் இட்டு தான் வீடு கட்டி உள்ளோம். அவ்வாறு மூன்று அடி சந்து விட்டு வீடு கட்டி உள்ளோம் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

5. வழக்குரையில் சொத்து விவரம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 41/10 A யின் கிழபுரத்தில் உள்ள இடத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல எங்களுக்கு உரிமை உள்ளது பிரதிவாதிகள் தான் எங்கள் இடத்தையும் சேர்த்து வீடு கட்டி உள்ளார்கள். தாவா சொத்தான சந்து சர்வே எண் 41/10 B யில் பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல எங்களிடத்தில் தான் உள்ளது. பிரதிவாதிகள் சர்வே 41/10B இல் உள்ள தங்களது இடத்தில் தாவா சொத்தான சந்தை விட்டு தான் வீடு கட்டி உள்ளார்கள் என்றால் சரியல்ல அவர்கள் எங்கள் இடத்தையும் சேர்த்து வீடு கட்டிக் கொண்டார்கள்.

6. நீ.ம.சா-2 ஆன நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் வாதி பிரதிவாதிகளின் இடங்களின் அளவும் தாவா சொத்தின் சந்தின் அளவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது பிரதிவாதிகளின் இடத்தில் அமைந்துள்ள காரணத்தால் தான் ஆணையர் எவ்வித அளவுகளும் குறிப்பிடாமல் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சாபா சுத்தானது பிரதிவாதிகளின் இடத்தில் அமைந்துள்ளதால் பதிவாதிகளின் வீட்டு சுவற்றில் அவர்கள் பைப் லைன் அமைத்துக்கொள்ள அவர்களுக்கு முழு உரிமை உள்ளது என்றாலும் அதனை ஆட்சேபனை செய்ய எங்களுக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல.

7. கடந்த 14.07.2019 அன்று நாங்கள் வெளியூர் சென்றிருந்தபோது பிரதிவாதிகள் அவர்களது வீட்டின் மேற்குபுரசுவற்றில் குழாய்கள் பதித்ததாக கூறியுள்ளது தவறு என்றாலும் அது போன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் ஏதும்

கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல . கடந்த 14.07.2019 அன்று நான் சொல்வது போல் வெளியூருக்கு செல்லவில்லை என்றாலும் அவ்வாறு சென்றிருந்தால் எந்த ஊருக்கு சென்று இருந்தேன் என்று குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றாலும் சரியல்ல .

8. முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் தாவா சந்தில் பிரதிவாதிகள் செடிகள் வைத்ததை நாங்கள் ஆட்சேபனை செய்ததாகவும் அதனால் பிரதிவாதிகள் என்னிடம் தகராறு செய்ததாகவும் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. கடந்த 27.02.2020 அன்று தாவா சொத்தை அளவீடு செய்ய முயற்சி செய்தபோது பிரதிவாதிகள் தடுத்ததாக வழக்கிற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அவ்வாறு எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரி அல்ல. அதேபோல் 01.03.2020 அன்று பிரதிவாதிகள் மீண்டும் எங்களிடம் தகராறு செய்ததாக கூறியுள்ளது தவறு என்றாலும் அது போன்று எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

9. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் உரை மற்றும் கூடுதல் பதிலுரையில் சொல்லப்பட்ட சங்கதிகளை மறுத்து எனது தரப்பில் மறுப்புரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த பின்னிட்டு தான் தாவா சொத்து விவரத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் தவறானது என்றாலும் அதன் அடிப்படையில் இந்த தாவாவை திருத்தம் செய்துள்ளதும் தவறானது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு ஆயிட்ட சொத்துக்களும் முன்பு பின் முரணாக அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் எனக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள வீட்டிற்கு உண்டானவை என்றாலும்

தாவா சொத்து தொடர்பான ஆவணங்கள் இல்லை என்றாலும் சரியல்ல.

10.தாவா சந்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் பின்னிட்டு ஏற்பட்ட யோசனையின் காரணமாக தாவா சொத்து விவரத்தை திருத்தி பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.உண்மை விவரங்களை மறைத்து பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றாலும் சரியல்ல இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.37 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. Jansi Rani,

Additional District Munsif, Attur

Typed by S. Reshma - O.S.46/2020, Dt 14.08.2026.